# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2026.04.16 |


## இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2026 மார்ச்சு

### கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2026 மார்ச்சில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), பருவகால கேள்வியுடன் தொடர்பான அதிகரித்த நடவடிக்கையினால் ஆதரவளிக்கப்பட்டு, 2026 மார்ச்சில் 66.7ஆக அதிகரித்தது.** எனினும், மூலப் பொருள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடுகள், அதிகரிக்கின்ற செலவுகள் மற்றும் ஏற்பாட்டு சேவை மட்டுப்பாடுகள் போன்றன காரணமாக இறுக்கமான உற்பத்திச் சூழலொன்று பற்றி பல பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள் குறிப்பாக உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் புடைவைகள் மற்றும் அணியும் ஆடைத் தயாரிப்பு துறைகளிலுள்ளவை மார்ச்சில் விரிவடைந்தன. கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்ணும் அதிகரிக்கின்ற உற்பத்திக் கேள்வியுடன் இசைந்துசெல்லும் விதத்தில் விரிவடைந்தது. மேலும், தற்போது இடம்பெறும் மத்திய கிழக்கு மோதலின் காரணமாக சாத்தியமான இடையூறுகளுக்கு எதிராக தமது உற்பத்தித் திட்டங்களைப் பாதுகாப்பதற்காக முன்னெச்சரிக்கைமிக்க களஞ்சியப்படுத்தலினை சில நிறுவனங்கள் தெரிவித்தன. தொழில்நிலைச் சுட்டெண் மார்ச்சில் மெதுவான வேகமொன்றிலேனும் விரிவடைந்தது. அதேவேளை, குறிப்பாக கேள்வி அழுத்தங்கள் மற்றும் கப்பற்பயணத்துடன் தொடர்பான இடையூறுகள் காரணமாக நிரம்பலர் விநியோக நேரம் தொடர்ச்சியாக நீட்சியடைந்தது.


***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***

| மாறி | நவெ. | திசெ. | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **56.8** | **66.7** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 55.0 | 69.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 54.5 | 68.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 58.6 | 55.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 60.0 | 59.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 59.6 | 75.5 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த காலாண்டில் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், தற்போதைய மத்திய கிழக்கு மோதலுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மைகளினால் ஓரளவு மிதமடைந்திருப்பினும் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் காணப்பட்டது.

**கொ.மு.சு தயாரிப்பு 2026 மார்ச்சு 66.7**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 ஏப்பிறல் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 மாச்சில் 59.4 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றை எடுத்துக்காட்டுகின்றது.**

வியாபார நடவடிக்கைகளில் விரிவாக்கமானது துறைகளுக்கிடையில் பரந்த அடிப்படையிலான மேம்பாடுகளினால் ஆதரவளிக்கப்பட்டிருந்தது. நிதியியல் பணிகள் துறை, அதிகரித்த கடன்வழங்கல் நடவடிக்கையிலிருந்து அனுகூலமடைந்து முதன்மைத் தூண்டுதலாக காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் என்பன பண்டிகைக் கேள்வியின் காரணமாக விரிவாக்கமொன்றைக் காண்பித்த அதேவேளை, தொழில்சார் பணிகளும் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.

காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளித்தல் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவிலான வளர்ச்சியிலிருந்தான மேலதிக ஆதரவுடன் நிதியியல் பணித் துறையினால் தூண்டப்பட்டு, புதிய வியாபாரங்களின் விரிவாக்கம் 2026 மாச்சில் தொடர்ந்தது.

பண்டிகைக் காலத்தினை எதிர்பார்த்து அதிகரிக்கின்ற நுகர்வோர் கேள்வியினை நிவர்த்திசெய்வதற்கு சில நிறுவனங்கள் தமது தொழிற்படையினை விரிவடையச்செய்தமையினால் தொழில்நிலை 2026 மாச்சில் மேலும் அதிகரித்தது. நிலுவையிலுள்ள பணி, மாத காலப்பகுதியில் சுருக்கத்தின் வேகம் மிதமடைந்திருந்த போதிலும், தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | 2026 பெப். | 2026 மாச். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **54.4** | **59.4** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 53.8 | 57.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.1 | 54.2 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 47.6 | 48.1 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 65.9 | 57.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த காலாண்டுக்கான வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள், தற்போதைய புவிசார் அரசியல் சூழலில் நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில், தோன்றக்கூடிய பருவகாலக் கேள்வி மற்றும் புதிய வாய்ப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டு வலுவானதாகக் காணப்பட்டது. எனினும், மத்திய கிழக்கு மோதலின் தாக்கம் மற்றும் பரந்தளவிலான உலக பொருளாதார நிச்சயமற்றதன்மை உள்ளடங்கலாக தோற்றப்பாட்டிற்கான சில நிறுவனங்கள் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளை சுட்டிக்காட்டின.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**59.4**
**2026 மாச்சு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | ஆதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 ஏப்பிறல் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.